அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பேருந்து நிறுத்தம், அதாவது stage என்பது நகரப் பேருந்துகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய பேருந்து நிறுத்தமாக இருந்தால், அந்த நிறுத்தத்தில் தொலைதூரப் பேருந்துகள் நிற்காது. எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைப் பரிசீலித்து அங்கு பேருந்தை நிறுத்துவது அவசியமாயின், அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பேருந்து வழித்தட நீட்டிப்பைப் பற்றி கூறியிருக்கிறார்கள். அதையும் ஆய்வு செய்து, தேவை இருக்குமாயின் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 130, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

130—

சமுதாயக் கூடம்

***13041—திரு. வி.எஸ். காளிமுத்து:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாராபுரம் தொகுதி, மூலனூர் கிளங்குண்டல் ஊராட்சி, செம்மாலகவுண்டர் புதூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

சாதிக்கு ஒரு தலைவர் உண்டு தமிழகத்தில்; ஆனால், ஆதி திராவிட மக்களுக்காக சாதித்த ஒரு தலைவர் உண்டு என்றால், அவர்தான் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் திருவடியை வணங்கி, மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களையும் வணங்கி என்னுடைய பதிலை அளிக்கிறேன்.

2017 ஜூலை 4]

தாராபுரம் தொகுதி, மூலனூர் கிளங்குண்டல் ஊராட்சி, செம்மாலகவுண்டர் புதூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் கட்டுவது குறித்த உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மக்கள்தொகை, போதுமான இடம் மற்றும் இதர ஆவணங்களின் அடிப்படையில் ஆராய்ந்து, மாண்புமிகு முதல்வர் அவர்களின் அனுமதியோடு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து அவர்கள்.*

திரு. வி.எஸ். காளிமுத்து: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாராபுரம் தொகுதி, மூலனூர் கிராமத்திலுள்ள கிளங்குண்டல் பஞ்சாயத்து என்பது மிகப் பெரிய பஞ்சாயத்து; 26 கிராமங்களை உள்ளடக்கியது. அது 7,680–க்கும் மேற்பட்ட மக்கள்தொகை உள்ள பஞ்சாயத்து ஆகும். நான் ஓராண்டு காலமாக சமுதாயக் கூடம் ஒன்றை அங்கே அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டே இருக்கின்றேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனைப் பரிசீலனை செய்து, அங்கே சமுதாயக் கூடம் ஒன்றை அமைத்துத் தருமாறு தங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதியொதுக்கீட்டைக் கணக்கில் கொண்டு சமுதாயக் கூடங்கள் படிப்படியாகக் கட்டப்பட்டு வருகின்றன. எனவே, உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, நிச்சயமாக முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து அவர்கள்.*

திரு. வி.எஸ். காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், தாராபுரம் தொகுதியிலுள்ள ஆதி திராவிடர் மகளிர் விடுதிகளில் குடிநீர்ப் பிரச்சினை அதிகமாக உள்ளது. அங்கே ஒரு bore–well அமைத்துத் தருமாறும், குண்டடத்திலுள்ள ஆதி திராவிடர் மகளிர் விடுதிக்கு தண்ணீர் வசதி செய்து தருமாறும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விடுதிகளில் தண்ணீர் வசதி இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார் அவர்கள்.

திரு. எஸ். அம்பேத்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 80 ஆண்டு காலம் பொது வாழ்க்கையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, ஒட்டுமொத்த உலக அரசியல் வரலாற்றில் மிக உச்சத்தில் அமர்ந்து கொண்டிருக்கும் எங்கள் கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உழைப்பு, உழைப்பு, உழைப்பு என்ற சொல்லின் சொந்தக்காரரும், எங்கள் கழக செயல் தலைவருமான அண்ணன் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) திருவண்ணாமலை மாவட்ட கழகச் செயலாளரும், திருவண்ணாமலை சட்டமன்றப் பேரவை உறுப்பினருமான, எனது அரசியல் ஆசான் ஐயா அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வந்தவாசி நகராட்சியில் மொத்தம் 24 வார்டுகள் உள்ளன. அதில், 1–வது வார்டு மற்றும் 2–வது வார்டுகளில் ஆதி திராவிடப் பெருமக்கள் அதிகம் வசிக்கின்ற பகுதிகளில், பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய அந்த மக்களுக்காக ஒரு சமுதாய நலக் கூடம் அமைத்துத் தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

2017 ஜூலை 4]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை, மாண்புமிகு முதல்வர் அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, துறை அலுவலர்களால் ஆய்வு மேற்கொண்டு, நிறைவேற்ற வாய்ப்பிருப்பின் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

(அ) பேரவைத் தலைவர் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், என்னவென்று சொல்லுங்கள்.*

***திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு பிரச்சினைகளைக் குறித்து விளக்கம் பெற நான் விரும்புகிறேன். ஒன்று தங்களிடம், இன்னொன்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடம். தங்களிடம் நான் தெரிந்துகொள்ள விரும்புவது, இரவு 2–00 மணிக்கு நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் உடல்நலமற்று அப்பல்லோ மருத்துவமனைக்குச் சென்றிருக்கிறார்கள். எனவே, அவருடைய உடல்நலம் எப்படி இருக்கிறது என்பதை இந்த மன்றம் அறிய ஆவலுடன் இருக்கிறது. நன்றாக இருப்பார்கள் என்றுதான் நினைக்கிறோம், சொல்லுங்கள்.*